முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved



A Plus Campus A Plus Campus A Plus Campus A Plus Campus

பரீட்சைத் திணைக்களம்- A PLUS CAMPUS
Exam Department - A PLUS CAMPUS
විභාග දෙපාර්තමේන්තුව - A PLUS CAMPUS

தரம்-10 முதலாம் தவணைப் பரீட்சை , 2026
ශ්‍රේණිය-10 පළමු වාරය විභාගය, 2026
Grade-10 First Term Examination, 2026

வணிகக்கல்வியும் கணக்கீடும்
Commerce

சுட்டெண்/Index No:………………

1.30 மணித்தியாலம்
1.30 Hours

1. பின்வரும் நோக்கங்களுள் வணிக நிறுவனமொன்றில் காணக்கூடிய பிரதான நோக்கமாக அமைவது,

   1. மனித தேவை விருப்பங்களை நிறைவு செய்தல்.
   2. பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்தல்.
   3. இலாபம் உழைத்தல்.
   4. வேலைவாய்ப்புக்களை தோற்றுவித்தல்.

2. பின்வரும் பண்புகளில் தேவைக்குரிய பண்புகளை மாத்திரம் கொண்டுள்ள தொகுதியினைத் தெரிவு

செய்க.

   1. அத்தியவசியமானவை, பல்வேறுபட்டவை, வரையறுக்கப்பட்டவை
   2. பொதுவானவை, வரையறுக்கப்பட்டவை, பல்வேறுபட்டவை
   3. பொதுவானவை, உருவாக்கக் கூடியவை, வரையறுக்கப்படாதவை
   4. அத்தியவசியமானவை, உருவாக்கக் கூடியவை, வரையறுக்கப்பட்டவை

3. பின்வரும் வணிகங்களுள் பொருள் உறபத்தி வணிகமொன்றாகக் குறிப்பிடக் கூடியது?

   1. அழகுக்கலை நிறுவனம் 2. தயாரிக்கப்பட்ட உணவு வியாபார நிலையம்
   3. மொத்த வியாபார நிலையம் 4. காப்புறுதி நிறுவனம்

4. உற்பத்திக் காரணிகளையும் அதற்குரிய உதாரணங்களையும் சரியாகப் பொருந்தச் செய்யும் விடையினை

தெரிவு செய்க.

   1. நிலம் - கட்டிடம் 2. உழைப்பு - கணக்காளர்கள்
   3. மூலதனம் - காட்டுவளம் 4. முயற்சி - முகாமையாளர்

5. பொருட்கள் சேவைகளுக்கிடையிலான வேறுபாட்டினை காட்டக் கூடிய பண்பொன்று

   1. விலைமட்டம் 2. வழங்கலின் அடிப்படை
   3. களஞ்சியப்படுத்தக்கூடிய ஆற்றல் 4. சின்னத்தின் அடிப்படை

A PLUS CAMPUS

6. உற்பத்திப் பொருளொன்றைச் சந்தைக்கு விநியோகிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படுகின்ற

காரணியொன்றல்லாதது.

1. நுகர்வோரின் வருமான மட்டம் 2. நுகர்வோரின் சுவை

3. சமூக நிலைமை 4. விலைமட்டம்

7. வணிக நிறுவனங்களில் சில பின்வருமாறு

A. மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனம்

B. வங்கி நிறுவனம்

C. கையடக்கத் தொலைபேசி உற்பத்தி நிறுவனம்

D. தச்சுத் தொழில்

சேவை உற்பத்தி வணிகங்களை மாத்திரம் கொண்டுள்ள விடை எது?

1. A யும் C யுமாகும் 2. A யும் B யுமாகும் 3. A யும் D யுமாகும் 4. B யும் C யுமாகும்

8. பௌதீக ரீதியான நிரந்தர இடமின்றி நிகழ்காலத்தில் வணிக கருமங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற பிரதான வசதியானது.

1. பக்ஸ் இயந்திரம் 2. தொலைபேசி 3. கணிணி 4. தகவல் தொழில்நுட்பம்

9. வணிகமொன்றில் வணிகத்திட்டத்தை உரியவாறு நடைமுறைப்படுத்தல் சரியாகத் தீர்மானங்களை எடுத்தல் என்பவை யாரால் மேற்கொள்ளப்படுவது

1. முகாமையாளர் 2. ஊழியர் 3. உரிமையாளர் 4. வழங்குனர்

10. வணிகமொன்றில் உரிமையாளர்கள் பின்வரும் எந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஆர்வம்

காட்டுவதில்லை,

1. போதுமானளவு இலாபத்தை பெற்றுக் கொள்ளல்.
2. வணிகத்தின் எதிர்கால விருத்தி
3. நியாயமான சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளல்.
4. முதலீட்டின் பாதுகாப்பு

APLUS CAMPUS

## பகுதி-II

01) 1. தேவை, விருப்பம் என்பவற்றுக்கிடையிலான இரு வேறுபாடுகளைத் தருக.

2. பின்வரும் கூற்றக்கள் உண்மை அல்லது பொய் என்பதைக் குறிபபிட்டுக் காட்டுக.

(அ) வணிகம் என்பது மனித தேவைகள் விருப்பங்களை நிறைவு செய்வதற்காக பல்வேறு பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்தல் அல்லது வழங்கல் என்பவற்றுடன் இணைந்த பொருளாதார நடவடிக்கையாகும். (...........)

(ஆ) தரத்தில் சிறந்த பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக் கொள்வதே நுகர்வோரின் நோக்கமாகும். (...........)

(இ) வணிகத்தில் ஈடுபடுத்துகின்ற உளரீதியான பங்களிப்பு உழைப்பு எனப்படும். (...........)

(ஈ) முகாமையாளரின் பிரதான நோக்கம் தேவையானளவு இலாபம் உழைப்பதாகும். (...........)

3. சிறிமாலி தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் வணிகமொன்றை அவரின் பெயரில் நடாத்திச் செல்கிறார்.

(அ) உற்பத்தியின் தன்மைக்கேற்ப இவ்வணிகம் எவ்வகை வணிகத்தைச் சார்ந்தது?

(ஆ) தயாரிக்கப்பட்ட உடன் உணவுகளைச் சந்தைக்கு வழங்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய இரு விடயங்களைக் குறிப்பிடுக.

4. (அ) வணிகமொன்றில் உரிமையாளர் என்றால் யார்? விளக்குக.

(ஆ)பின்வரும் பிரிவினர் வணிகங்களில் அக்கறை காட்டுவதற்கான ஒரு காரணத்தைக் குறிப்பிடுக.

1. வழங்குநர் 2. பொதுமக்கள்

A PLUS CAMPUS